www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

கிண்ணம் 1 எண்ணம் 6

15.06.1990






WM

ITALIA 90



## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எண்ணம் 6 ஆனி

"மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ?"

- பாரதியார்

அன்புச் சிறுவர்களே,

உங்களது அமுதம் 5 அவசு அடி கடந்து ஆறாவது அடியினை - ப்பதிக்கின்றது இந்த ஆறாவது அடிகள் தட்டச்சு இயந்திர அடிகளாகப் பதிவது அமுதத்தின் வளர்ச்சியை-யும், அது பெற்றுவரும் ஆதரவையும் காட்டுகின்றது.

இந்த அமுதத்தில் நீதிக்கதைகள், நன்னெறிக்கதைகள், மூளைக்குவேலையான கதைகள், நகைச்சுவைக்கதைகள், அறிவியல்கதைகள் என்று பல வகையான கதைகள் வருகின்றன. இனிவரும் அமுதங்களில் இவை தொடர்ந்தும் வர விருக்கின்றன. மூளைக்கு வேலையான கதைகள், விடுகதைகள் உங்களுக்கு மிகவும் பிடிக்கும் என்பது உண்மை. அவற்றின் விடைகளை நீங்களாக கண்டுபிடிக்க வேண்டும் நீங்களாக கண்டுபிடிப்பீர்கள் என விரும்பித்தான் விடைகளை அடுத்த புத்தகங்களில் தர இருக்கின்றோம். இன்னும் பல வித அம்சங்கள் அடுத்த புத்தகங்களில் வர இருக்கின் றன. உங்களுக்கு விளங்காத பகுதிகள், சொற்களை உங்கள் பெற்றோர் உறவினர் மூலம் நீங்கள் படித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

நீங்களும் உங்களுக்குத் தெரிந்த கதைகள், விடுகதைகள், என்பனவற்றை எழுதியும் படங்களை வரைந்தும் அனுப்புங்கள் அமுதத்தில் பிரசுரம் செய்கிறோம்

அன்புடன்
ஆசிரியர்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டைப்படம் :- சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி WM90 ஐக் குறிக்கின்றது. விளையாட்டுக்கள் பலவற்றின் பிறப்பிடமான இத்தாலியில் இம்முறை உதைபந்தாட்டப் போட்டி நடைபெறுகின்றது. இத்தாலி பழம் பெரும் புகழ்வாய்ந்த நாடு ஆகும். இந்த உதைபந்தாட்டப் போட்டி நாலு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. பல விடயங்களில் தனிப்போக்கைக் கொண்டு இயங்கும் ஐக்கிய அமெரிக்கா இம்முறை இப்போட்டியில் கலந்துள்ளது. முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது.

கடந்த முறை மெக்சிக்கோவில் (86ம் ஆண்டு) ஆர்ஜென்டீனா வெற்றி பெற்றது. இம்முறை இறுதிப் போட்டிக்கு வழமையை விடக் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

— ஆனந் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# பன்றியும் பசுவும்

ஒரு நாள் ஒரு பன்றியும் ஒரு பசுவும் சந்தித்துக் கொண்டன. பன்றிக்குப் பசுவைப் பார்க்கப் பொறாமையாக இருந்தது. தனது பொறாமையையும், மனவருத்தத்தையும் பன்றி பசுவிடம் வெளிக் காட்டிக் கொண்டது. "பசுவே நீ கொஞ்சம் பாலைத்தானே இந்த மனிதர்களுக்குக் கொடுக்கின்றாய். உன்னை எவ்வளவு தடபுடலாக வைத்திருக்கின்றார்கள். தெய்வமாகக் கூட வழிபடுகின்றார்கள். என் உடம்பில் ஒரு பகுதியையும் விடாமல் ருசித்துச் சாப்பிடப் போகின்றார்கள். மிகவும் பழுதான அழுகியவற்றை எனக்குச் சாப்பாடு என்று போடுகின்றார்கள். கோபம் வந்தால் பன்றி என்று இழிவாகப் பேசுகின்றார்கள். என்று பன்றி தனது மனவருந்தத்தை வெளிக் காட்டியது.

பசு யோசித்துவிட்டு, நீ இறந்த பின்னர் தானே மனிதர்களுக்குப் பயன் படுகின்றாய். நான் அப்படி அல்லவே!

www.tamilarangam.net



உயிருடன் இருக்கும் போது பயன் அளிக்கின்
றேன். உயிருடன் இருக்கும் போது நாம்
மற்றவர்களுக்குப் பயன் உள்ளவர்களாக
இருக்க வேண்டும். அந்தப் பயன் மிகச்சிறிய
தாக இருந்தாலும், பெரும் மதிப்பு
உடையதாய் இருக்கும். என்று சொல்லி
யது. *

மிருகங்களோ உயிர் உள்ள போது மற்றவர்க
ளுக்குப் பயன் பட்டு உயர்வாக மதிக்கப் படுகின்
றன என்றால்? மனிதர்கள் உயிருடன்
இருக்கும் போது மற்றவர்களுக்கு உதவினால்
அவர்கள் பெறும் மதிப்பு அளவிடமுடியாது -
- அல்லவா?

www.tamilarangam.net

# நாயும் மனிதனும்

முந்திய காலங்களில் நாய்கள் எல்லாம் தங்கள் மனம் போல காட்டில் அலைந்து திரிந்து வாழ்ந்து வந்தன.

ஆனாலும் தங்களை விட வலிமை கூடிய விலங்குகளுக்கு அவை அஞ்சியே வாழ்ந்தன. இதனால் வெறுப்படைந்த நாய் ஒன்று வலிமையுடைய விலங்கு ஒன்றின் பாதுகாப்பில் வாழ்வதே தனக்கு நல்லது என்று எண்ணியது. அதற்கு ஓநாயின் நினைவு வந்தது. நேரே ஓநாயிடம் சென்றது. 'என்னை உன் பணியாளாக ஏற்றுக்கொள். நீ ஏவுகின்ற எல்லா வேலைகளையும் நான் செய்வேன். என்னைப் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு' என்றது நாய்.



www.tamilarangam.net

ஓநாயும் தனக்கு ஒருவேலை
யாள் கிடைத்ததை எண்ணிப் பெருமை கொண்டு
நாயைப் பணியாளாக ஏற்றுக் கொண்டது.
இரவு வந்தது. நடுச்சாமம் நாய் குரைக்கத்
தொடங்கியது. "ஏ நாயே சத்தம் போடாதே
கரடி வந்து என்னையும் உன்னையும்
கடித்துச் சாப்பிட்டு விடும்" என ஓநாய்
நாயைப் பார்த்துச் சொன்னது.


"ஓகோ! ஓநாயை விடக் கரடி
வலிமையுடையது போல் இருக்கின்றது.
அப்படியென்றால் கரடியின் பாதுகாப்பில்
வாழ்வதே நல்லது" என நாய் எண்ணியது.
கரடியிடம் சென்றது. ஓநாயிடம் சொன்ன
வற்றையே கரடியிடமும் சொன்னது.
கரடியும் தனக்கு ஒரு பணியாள் கிடைத்
ததையிட்டுப் பெருமைப் பட்டது. நாயை



www.tamilarangam.net

ஏற்றுக் கொண்டது. அன்றிரவு நடுச்சாமம் நாய் குரைக்கத் தொடங்கியது. "ஏ நாயே! சத்தம் போடாதே!, சிங்கம் வந்தால் உன்னையும் என்னையும் கொன்று தின்று விடும். சத்தம் போடாமல் படு" என்று நாயைப் பார்த்துக் கரடி சொல்லியது.

"ஓகோ! கரடியை விடச் சிங்கம் வலிமையுடையது என்றால் ஏன் நான் கரடியுடன் இருக்க வேண்டும்?, சிங்கம் வலிமையானது. அதனிடம் போய்ச் சேருவதே புத்திசாலித்தனமானது" என எண்ணிய நாய் சிங்கத்திடம் சென்றது. அந்நாய், கரடியிடம் நாம் சொல்லிய வசனங்களையே சிங்கத்திடமும் சொல்லியது. சிங்கமும் நாயை ஏற்றுக் கொண்டது.



www.tamilarangam.net

அன்றிரவு நடுச் சாமம் வந்தது
நாய் குரைக்கத் தொடங்கியது. "ஏ நாயே!.
சத்தம் போடாதே!, மனிதன் வந்தால் எம்மைக்
கொன்று போடுவான். சத்தம் போடாமல்
படு என்று சொல்லியது. "ம்... சிங்கமும்
வலிமை குறைந்த மிருகமாகத் தான் இருக்கின்-
றது. அது மனிதனுக்குப் பயப்படுகின்றது.
எனவே மனிதனிடம் போய்ச் சேருவது தான்
பாதுகாப்பாக இருக்க வழி" என எண்ணிய
நாய் மனிதனிடம் சென்றது. தனது வழமை
யான வசனங்களைச் சொல்லியது.
மனிதன் நாயை ஏற்றுக் கொண்டான்.

இரவு வந்தது. நாய் குரைக்கத்
தொடங்கியது. "நாய் பசியில் தான் குரைக்கின்
றது" என எண்ணிய மனிதன் ரொட்டித்
துண்டுகளை நாய்க்குப் போட்டான்.
நாய் தின்று விட்டுப் படுத்துக் கொண்டது.



www.tamilarangam.net

அன்று முதல் நாய்
மனிதனை மிகுந்த வலிமை உடையவன்
என்று பூரணமாக நம்பி அவனுடனே வாழத்
தொடங்கியது. ***

நாய் ஏன் மனிதனுடன் வாழ்கின்றது?
என்பது பற்றிப் பழைய கிரேக்க
நாடோடிக் கதைகளில் காணப்படும் ஒரு
கதையே மேலே சொல்லப் பட்டிருந்தது.
இதற்கு அறிவியல் ரீதியான உண்மை ஒன்று
இருக்க வேண்டும்.

மனிதன், ஓநாய், நரி போன்ற
மிருகங்களையும் வீட்டு மிருகங்களாக வளர்க்க
முயற்சி செய்திருக்கின்றான். ஆனால், ஓநாய்,
நரி, போன்றவை பசியுடன் இருக்கும் போது
தம் இயற்கைத் தன்மைக்கு வந்து, மனிதனுக்குக்
கட்டுப் படுவதில்லை. அதனாலே அவை இன்றுங்
காட்டு விலங்குகளாக இருக்கின்றன.

ஆனால், நாய் மட்டும், பசியுடன்
இருக்கும் போதும் மனிதனின் கட்டளைக்குக் கீழ்ப்படி
கின்றது. நாய் ஓரளவு அறிவுள்ள மிருகம்.
மனிதனைப் புரிந்து கொண்டு, அவனுடன்

சேர்ந்து வாழ்கின்றது. பழைய கால ஓவியங்களில் நாயும் மனிதனுடன் இருப்பதாக உள்ளது. எனவே மிக நீண்ட காலமாக நாய் மனிதனின் வாழ்வு மிருகமாகி விட்டது என்பது மிகத் தெளிவாகின்றது *

# பெற்ற நாடு

வெள்ளைக் கொக்கே வானத்தில்
வேகமாகப் பறக்கின்றாய் !
கள்ளத்தனமாய் மீனைத்தேடிக்
கரையின் ஓரம் பறக்கின்றாய் !

நீரின் மேலும் பறக்கின்றாய்
நிலத்தின் மேலும் பறக்கின்றாய்
பாரின் அழகைப்பார்ப்பது போல்
பயமில்லாமல் பறக்கின்றாய்

விண்ணில் பறக்கும் நாராய் நீ
விரிந்த உலகைச்சுற்றுகையில்
கண்ணைக் கவரும் பேரழகுக்
காட்சி எதுவோ கூறிடுவாய் ?

கொக்கு . . .

என்னில் அடங்கா இடம் கண்டேன்
எங்கே சுற்றிப் பார்த்தாலும்

என்னைப் பெற்ற நாட்டைப்போல்
எதுவும் அழகாய் இல்லையப்பா.

. . கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

www.tamilarangam.net

# வெள்ளி

ஓர் ஊரில் கந்தையா என்பவன் இருந்தான். அவன் ஒருவருக்குமே உதவி செய்ய மாட்டான். வீட்டிற்கு யாரேனும் சென்றால் தேனீர் கூடக் கொடுக்க மாட்டான். தான் எங்கேயாவது சென்றால் இரண்டு மூன்று நாள் தங்கி நின்று விட்டுத்தான் வருவான். இவனுடைய கஞ்சத்தனத்தால் ஊர் மக்களோ அவனை வெறுத்து, ஒதுக்கினார்கள். இவனது நண்பர் ஒருவர் கந்தையாவைக் காண அவ்வூருக்கு வந்தார். கந்தையாவின் வீடு தெரியாத படியால், அங்கு விசாரித்தார். கந்தையாவின் வீட்டை நண்பர், விசாரித்த போது இவரும் கந்தையாவைப் போல கஞ்சனாகத் தான் இருப்பார் என்று சிலர் கிண்டல் செய்தார்கள். இதனால் நண்பர் மிகவும் கவலைப்பட்டார். கந்தையா இப்படிக் கஞ்சனாகிவிட்டானா? என்று கவலைப்பட்டார். கந்தையாவிற்குப் பாடம் புகட்டி

www.tamilarangam.net

விட்டுத் தான், போவது என்று எண்ணிக் கொண்டார். கந்தையாவின் வீட்டுக்குச் சென்றார். கந்தையாவிற் சரியான மாற்றம் கதைகள் எல்லாம் மாறி இருந்தன.

நண்பர் பல விதமான நகைச்சுவைக் கதைகள் சொல்வதில் கெட்டிக்காரர். கந்தையாவும் நண்பரின் கதைகளைக் கேட்பதில் விருப்பம் உள்ளவர். அதுவும் எந்தவிதமான செலவும் இல்லாமல் கதை



கிடைக்கும் போது கந்தையாவுக்குக் கொண்டாட்டந்தானே? நண்பரிடம் ஏதாவது

www.tamilarangam.net

கதை ஒன்று சொல்லுமாறு கேட்டார். நண்பரும் இது தான் சமயம் என்று கதையைச் சொல்லத் தொடங்கினார்.

ஒரு ஊரில் ஒரு கஞ்சன் இருந்தான். பிள்ளைகளுக்குக் கூட நல்ல சாப்பாடு வாங்கிக் கொடாமல் காசு சேர்த்து வந்தான். இவனுக்கு நல்ல புத்திமதி சொல்ல விரும்பிய துறவி ஒருவர் அவனைத் தன்னுடைய ஆசிரமத்திற்கு வர அழைத்தார். கஞ்சனும் அங்கே சென்றான். துறவி கண்ணாடி யன்னலைக் காட்டி இதற்குள்ளே ஏதாவது தெரிகின்றதா? என்று கேட்டார். "ஆம் வெளியே சனங்கள் போய்க் கொண்டிருக்கின்றார்கள்: தெரிகின்றது; என்றான். கஞ்சன். துறவி ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைக் கொண்டு வந்து கொடுத்து இதில் என்ன தெரிகின்றது?, பார் என்றார். கஞ்சன் கண்ணாடியை வாங்கிப் பார்த்தான். "சாமி என்னைத்

www.tamilarangam.net

தெரிகின்றது என்றான். துறவி அந்தக் கண்ணா டியின் பின் புறத்தைப் பார்க்கும் படி சொன்-னார். கஞ்சன் பார்த்தான். "சாமி ஒன்றுமே தெரிய வில்லை என்றான்.

துறவி சொல்லத் தொடங்கினார். சாதாரண மனிதர்களாக நாம் இருக்கும் போது, மற்றவர்களை எங்களுக்குத் தெரி-கின்றது. சாதாரண கண்ணாடிக்கு வெள்ளி பூசி விட்டால், அது முகம் பார்க்கின்ற கண்ணா டியாகி எங்களை மட்டுமே காட்டும். ஒரு மனிதனிடம் வெள்ளி (பணம்) சேர்ந்து விட்டால் அவனுக்கு மற்றவர்களைத் தெரிவதில்லை. கண்ணாடியின் மறுபக்கத்தி ல் பூசப்பட்ட வெள்ளியைப் பார்த்தால்,



www.tamilarangam.net

அது அதில் எதுவும் தெரியாது. ஒருவன் தன்னிடம் உள்ள வெள்ளியை (பணத்தையே) பார்த்துக் கொண்டிருப்பான் என்றால் அவனுக்கு அவனையே தெரியாமல் செய்து விடும் வெள்ளி (பணம்). என்றார் துறவி. கஞ்சன் தலைக் கவிழ்ந்து கொண்டு வீடு போய்க் கொண்டிருந்தான். என்று நண்பர் கதையைச் சொல்லி முடித்தார். சந்தையாவும் மனைவியும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தனர்.*

சாதாரண வெள்ளிக்கே மற்றவர்களைத் - தெரியப் பண்ணாத சக்தி இருக்கும், என்றால்; பெருக்கப் படும் வெள்ளிக்கு எவ்வளவு சக்தி இருக்கும்?

—

விடுகதை


1) வட்ட வட்டக் குருவி: வால் இல்லாத குருவி: ஊர் சுற்றும் குருவி: உருண்டோடும் குருவி: அது என்ன?

www.tamilarangam.net

# ஏமார்ந்த பூனை

ஒரு நாள் தாய் எலியும், குஞ்சு எலியும், சுவர் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தன. இவை செல்வதைக் கண்ட பூனை இவற்றைப் பிடிக்கத் துரத்தியது. தாய் எலி ஒரு பொந்துக்குள் ஒளிந்து கொண்டது. குஞ்சு எலியைப் பூனை துரத்திக் கொண்டே போனது. குஞ்சு எலியும் அப்படி இப்படி எல்லாம் ஓடிக் கொண்டே இருந்தது.

திடீர் என்று நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. பூனை எலிக் குஞ்சை விட்டுத் திரும்பி ஓடியது. குஞ்சு எலி நாய் வருகின்றதா?, என எட்டிப் பார்த்தது. நாயைக் காண வில்லை. தாய் எலிதான் நின்றது" அம்மா நாய் குரைத்த சத்தம் கேட்டதே எங்கே அம்மா' என்று குஞ்சு எலி கேட்டது. நாய் போலக் குரைத்தது



www.tamilarangam.net

நான் தான். இன்னொரு மொழியையும் தெரிந்து வைத்திருப்பது எவ்வாறு நல்லதென்று பார்த்தாயா?, என்று தாய் எலி குஞ்சு எலிக்குச் சொல்லியது ***

இன்னொரு மொழியையும் என்று தான் தாய் எலி சொல்லியதே தவிர. இன்னொரு மொழியை என்று சொல்லவில்லை. எலி தனது தாய்மொழியுடன் மேலதிகமாக நாய் மொழியையும் தெரிந்து கொண்டதே அல்லாமல் தன் மொழியை விட்டு நாய் மொழியை மட்டும் தெரிந்து கொள்ளவில்லை ஐரோப்பியத் தமிழர் கவனிக்கவும்.

விடுகதை

2) எட்டடி உயரத்தில் தொட்டில் அது என்ன?

3) வெளியே வெள்ளி உள்ளே தங்கம். அது என்ன?

4) சொன்னதைத் திருப்பிச் சொல்வான் - அவன் கிளிப் பிள்ளையல்ல: அவன் யார்?

5) ஒரே கிணற்றில் ஒரே தவளை அது என்ன?

www.tamilarangam.net

# எண்ணம் 5ன் விடுகதைகளின் விடைகள்

அருதம் ஐந்தாவது எண்ணத்தில் இடம் பெற்ற விடுகதைகளின் விடைகள்.

உங்களுக்குச் சொந்தமாய் இருந்தும், உங்களை விட மற்றவர்கள் கூடுதலாக உபயோகிப்பது = உங்கள் பெயர்.

மற்றவர்கள் உபயோகிக்கும் போது உங்களுக்குத் தெரிந்தும், நீங்கள் உபயோகிக்கும் போது உங்களுக்குத் தெரியாமல் இருப்பது = சுவப்பெட்டி

## விடுகதை

6) எடுக்க எடுக்க குறையாமல் அதிகமாகும். போடப் போட அதிகமாகாமல் குறையும் அது என்ன?

7) தூய்மையாக இருக்கும் போது கறுப்பாக இருக்கும் - ஆனால் அழுக்காக இருக்கும் போது வெள்ளையாக இருக்கும் அது என்ன?

www.tamilarangam.net

# குள்ளனும்



விறகுவெட்டிக் குள்ளன் கேட்ட பொருட்கள் – சிரிப்பைத் தந்தன. ஆனாலும் கிராமத்தலைவர் அவற்றைக் கொடுத்து அனுப்பினார். வெண்ணெய்க் கட்டியை உருட்டி ஒரு சிறிய பந்து போல செய்தான். கயிற்றைத் தோளிலே போட்டுக் கொண்டு, குள்ளன் மூலிகை மலையை நோக்கிச் சென்றான். இரவுச் சாப்பாடு அதிகம் சாப்பிட்டபடியால், இராட்சதன் பகல் முழுவதும் நீட்டி நிமிர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தான். இதீ

www.tamilarangam.net

# இராட்சதனும்

கிள்ளனுக்கு நல்ல வாய்ப்பாக இருந்தது.
இராட்சதனின் காலை ஒரு மரத்துடன்
சேர்த்துக் கட்டிக் கொண்டிருக்கும் போது
இராட்சதனின் நித்திரை கலைந்தது.
"யாரடா இங்கே வந்தது" என்று கத்தினான்.
கிள்ளன் கட்டையாய் இருந்ததால் உடனே
இராட்சதனுக்கு அவனைத் தெரியவில்லை.
சிறிது தூரத்தில் நின்ற கிள்ளன் சிறிய
கல்லை எடுத்து இராட்சதன் மீது எறிந்
தான். இராட்சதனுக்கு கோபம் வந்தது.
நிமிரிக் கொண்டு 'இந்தா பார் உன்னை
என்ன செய்கிறேன்" எனக் கத்தினான்.
நான் சிறியவன் சிறிய கல்லால்
எறிந்தேன். நீ பெரியவன் பெரிய
கல்லால் எறி பார்ப்போம் எனக்
கிள்ளன் கேட்டான். பெரிய கல்லா?
இராட்சதன் அங்கும் இங்கும் பார்த்தான்
பெரிய கல்லு அவன் நின்ற இடத்தில்



www.tamilarangam.net

இல்லை. அதோ பார் என்று கிள்ளான் வீதியில் இருக்கே உருட்டி விடப்பட்டிருந்த கல்லை காட்டினான். கொட்சதன் ஓடிப்போய் அந்தக் கல்லைத் தூக்கினான். அது திவறிக் குளத்திநுள் விழுந்தது. பாதை யின் நடுக்கே இருந்த தடை நீங்கியது. குளத்திற்குள் விழுந்த கொட்சதன் அதற்குள் இருந்த சேற்றுத் தண்ணீரை அள்ளிக் குடித்தான். கிள்ளான் சிரித் தபடியே 'நான் தாகம் வந்தால் கல்லைப் பிழிந்து தண்ணீர் குடிப் -பேன். உன்னைப் போலச் சேற்று தண்ணீரைக் குடிக்க மாட்டேன் என்று சொன்னான்.

என்ன? கல்லைப் பிழிந்து தண்ணீர் குடிப்பானா? கொட்சதனுக்கு குழப்பமாக இருந் தது. 'என்ன யோசிக்கின்றாய்? பெரிய பலசாலி வேலை செய்கின்ற உனக்கு இந்தச் சிறிய வேலை

www.tamilarangam.net

தெரியாதா? இதோ பார் என்று ... பஞ்சு போல உருட்டிக் கொண்டு வந்த வெண்ணெய்க் கட்டியை கல்லைத் தேடி எடுப்பது போல எடுத்து .... பிழியத் தொடங்கினான். வெண்ணெய்க்கட்டியிலிருந்து நெய் கசிந்தது. இராட்சதன் நடுங்கினான். கல்லையே பிழிகின்றான் என்னை என்ன செய்வானோ என எண்ணினான். இனிமேல் இங்கு இருக்க முடியாது என முடிவாக்கிக் கொண்டு மலையின் தெற்குப் புறமாக ஓடத் தொடங்கினான்.

உடற்பலத்தை உடையவனான இராட்சதனை தனது புத்திசாலித் தனத்தால் வென்ற விறகு வெட்டிக் குள்ளனை வரவேற்க கிராமத்து மக்கள் நான் முந்தி நீ முந்தி எனப் போட்டி போட்டுக் கொண்டு மூலிகை மலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர் ***

- நிறைந்தது -


www.tamilarangam.net

# உதவிக்கு உதவி

விவசாயி ஒருவன் தனது மாட்டுவண்டியில் நெல் மூடை ஒன்றை ஏற்றிக் கொண்டு சந்தைக்குப் போய்க் கொண்டிருந்தான். சந்தை பக்கத்து ஊரில் இருந்தது. ஆனபடியால் மாட்டு வண்டியை வேகமாக ஓட்டினான். பாதை கரடு முரடாக இருந்தது. வண்டியில் இருந்த நெல்மூடை பாதையில் விழுந்தது.

பாதையோ ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியாக இருந்தது. மூடையைத் தனித்து விவசாயியால் வண்டியில் ஏற்ற முடியாது. ஆனால் பாதையிலும் யாரும் வரவில்லை. என்ன செய்வது? என்று தெரியாமல் அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

தொலைவில் யாரோ



www.tamilarangam.net

குதிரையில் வருவது தெரிந்தது. குதிரையில் வருபவனிடம் மூடையைத் தூக்கிவிடு என்று கேட்பது "யானையில போறவனிடம் சுண்ணாம்பு கேட்பது போலத்தான் இருக்கும்" என எண்ணிக் கொண்டான். குதிரையில் வந்தவன் விவசாயிக்கு நன்கு தெரிந்த பணக்காரன் தான். அவர் பணக்காரர், அதுவும் குதிரையில் வருகின்றார் அவரிடம் இதைத் தூக்கி விடுங்கள் என்று கேட்பது கூடாது. வேறு யாராவது வரட்டும் என விவசாயி எண்ணிக்கொண்டான்.

குதிரையில் வந்தவர் விவசாயி வண்டியுடன் நிற்கும் இடத்திற்கு வந்ததும் குதிரையை நிறுத்தினார். கீழே இறங்கி வந்தார். விவசாயியை ஒருகை பிடிக்குமாறு சொல்லி மூடையை கஷ்டப்பட்டு வண்டியில் ஏற்றினார். விவசாயிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. 'ஐயா உங்களுக்கு என்னவென்று நன்றி சொல்வது என்று புரியவில்லை' என்றான். "உன்னைப் போல வேறு யாராவது இப்படிக் கஷ்டப்படும்

www.tamilarangam.net

போது நீயும் உதவி செய்வதன் மூலம்
எனக்கு நீ நன்றி செலுத்திவிடமுடியும்"
என்று குதிரையில் வந்தவர் சொல்லிவிட்டுக்
குதிரையில் ஏறிச் சென்றார். *
விவசாயியும் மகிழ்வுடன் சந்தைக்குச் சென்றான்

■ தேசியவீரன்

ஒரு நாட்டின் தேசிய வீரனாக
நாய் உள்ளது. எங்கு தெரியுமா?
சுவிற்சலாந்து நாட்டில் தான். பாரி என்ற
நாய்தான் அது. தனது வாழ் நாளில் பாரி
40 மனிதர்களைக் காப்பாற்றியுள்ளது.
சென்ற் பெர்னாட் இனத்தைச் சேர்ந்த
பாரிக்கு ஆறாவது அறிவு இருந்தது
கேட்கவோ பார்க்கவோ முடியாததூரத்தில்
மனிதர்கள் ஆபத்தில் இருந்தாலும் பாரி
ஓடிச் சென்று காப்பாற்றி விடுமாம்.
தேசிய அரும் பொருட் காட்சியகத்தில்
மியூசியத்தில் பாரியின் சிலை உள்ளது.
தகவல் தயானந்தன் -சுரேச்-

www.tamilarangam.net

# தெனாலிராமன்

## சூடு கண்ட பூனை

ஊரில் எங்கு பார்த்தாலும் எலிகள்! எலிகளை விரட்ட மக்கள் என்னென்னவோ உபாயங்கள் செய்து பார்த்தனர். ஒன்றும் பயன் தரவில்லை. அரசரிடம் சென்று முறையிட்டனர்.

குடிமக்கள் குறையைக் கேட்ட இராயர், "நாமும் எவ்வளவோ செய்து பார்த்து விட்டோம். ஒன்றும் பயன் தரவில்லை. எலிகளை விரட்ட ஆளுக்கொரு பூனை வளருங்கள். அந்தப் பூனை வளர்ப்புக்கு அரண்மனையிலிருந்து நாள்தோறும் பால் வாங்கிச் செல்லுங்கள்" என்றார்.

குடிமக்கள் இதற்கு ஒப்புக் கொண்டனர். அரசரின் உத்தரவுப்படி ஆளுக்கொரு பூனை தரப் பட்டது.

தெனாலி இராமனும் அரசர் கொடுத்த பூனைக் குட்டியை வீட்டுக்குக் கொண்டுவந்தான். அரண்மனை யிலிருந்து பெற்று வந்த பாலை நன்றாகக் காய்ச்சினான். பால் நன்றாகக் காய்ந்து சூடாகியதும் அதை அப்படியே எடுத்து வந்து பூனையின் முன்னால் வைத்தான்.

பூனை அவனுடன் வந்து கொதிக்கும் பாலில் நாக்கை விட்டது.

அவ்வளவுதான்! சூடு தாளாமல் கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது.

அன்றிலிருந்து கொதிக்காமல் ஆற வைத்த பாலாக இருந்தால்கூட அதன் பக்கமே பூனை திரும்பிப் பார்ப்பதில்லை.

www.tamilarangam.net

இது தெனாலி இராமன் குடும்பத்தினருக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. பால் பாத்திரத்தைத் திறந்து வைத்து விட்டுப் போனால் கூடப் பூனை அந்தப் பாலைக் குடிப்பதில்லை. சூடு கண்ட பூனையல்லவா!

சில மாதங்கள் சென்றன. இராயர் தாம் கொடுத்த பூனைகளை மக்கள் எவ்வாறு வளர்த்து வருகிறார்கள் என்று அறிய விரும்பினார். எல்லோரையும் பூனையுடன் அரண்மனைக்கு வருமாறு கூறினார்.

அனைவரும் தாங்கள் வளர்க்கும் பூனைகளுடன் அரண்மனைக்கு வந்தனர். எல்லோருடைய பூனைகளும் வேளா வேளைக்கு அரண்மனைப் பால் சாப்பிட்டுக் கொழுகொழுவென்று இருந்தன. ஆனால் தெனாலி இராமனின் பூனை மட்டும் உடல் வற்றி எலும்பும் தோலுமாய்க் காட்சி அளித்தது. இதைப் பார்த்த இராயர், "இராமா, உன் பூனை மட்டும் ஏன் இப்படி மெலிந்திருக்கிறது? அரண்மனையிலிருந்து வாங்கிச் செல்லும் பாலை நீ இதற்கு வைப்பதில்லையா?" என்று கேட்டார்.

"நான் என்ன சொல்லுவேன் அரசே! என் பூனை பாலைக் கண்டாலே காத தூரம் ஓடுகிறது. அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றான் இராமன்.

"என்ன! பாலை வெறுக்கும் பூனைகூட உலகத்தில் உண்டா?" என்று கேட்ட இராயர் ஒரு கிண்ணத்தில் பால் கொண்டுவந்து பூனையின் முன்னால் வைக்கச் சொன்னார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராயர் கூறியவாறே காவலன் ஒருவன் ஒரு கிண்ணத்தில் பால் கொண்டுவந்து தெனாலி இராமனின் பூனையின் முன்னால் வைத்தான்.

பாலைப் பார்த்ததுமே பூனை ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது.

'தெனாலி இராமன் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறான். அதுதான் பூனை பாலைக் கண்டாலே ஓடுகிறது' என்று நினைத்த இராயர், "இராமா, நீ செய்தது மிகப் பெரிய குற்றம். வாயில்லா ஜீவனைப் பட்டினி போட்டு வதைத்திருக்கிறாய். அதற்குரிய தண்டனையை நீ அனுபவித்தே ஆகவேண்டும்" என்றார்.

"அரசே! வாயுள்ள ஜீவன்களாகிய மனிதர்களுக்கே சரிவரப் பால் கிடைப்பதில்லை. இந்த நிலையில் வாயில்லா ஜீவனுக்காக நீங்கள் பரிந்து பேசுவது விந்தையாக இருக்கிறது" என்றான், இராமன்.

"நம் மக்களுக்குப் பால் சரிவரக் கிடைப்பதில்லையா?" என்று கேட்டார் இராயர்.

"ஆம் அரசே! எல்லாப் பால்காரர்களும் தாங்கள் கறக்கும் பாலைப் பூனைகளுக்காக அரண்மனையில் கொண்டு வந்து சேர்ப்பித்து விடுகிறார்கள். அப்படியிருக்க எங்களைப் போன்ற வாயுள்ள ஜீவன்களுக்கு எப்படிப் பால் கிடைக்கும்?" என்றான் இராமன்.

இராயர் தம் தவறை உணர்ந்து குடிமக்கள் அனைவருக்கும் பால் கிடைக்குமாறு செய்தார்.

---

விடுகதை

8) போருக்குப் போகமாட்டான். ஆனால்
படையையே நடுங்கவைப்பான். யார் அவன்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது தாய்நாடு

- விஜிதா - இராமலிங்கம் -

இலங்கை நமது தாய்நாடாகும். இது இந்து சமுத்திரத்தின் ஓர் அழகிய முத்தாக விளங்குகின்றது. நாலு பக்கங்களும் கடலாற் சூழப்பட்டிருப்பதால் இலங்கை தீவாக இருக்கின்றது. மாங்காய் வடிவில் அதன் வடிவம் இருக்கின்றது.

எமது நாடு, ஈழம், இலங்கை ஸ்ரீலங்கா, இரத்தினதுவீபம், மாணிக்கத்துவீபம், சிலோன் என்று பல பெயர்களால் அழைக்கப் படுகின்றது. இதன் தலைநகரமாகக் கொழும்பு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. தற்போது கொழும்பு துறைமுக மாநகராக உள்ளது. இலங்கையின் பாராளுமன்றம் ஸ்ரீ ஜெயவர்தனபுரவிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதிலிருந்து

www.tamilarangam.net

ஸ்ரீ ஜெயவர்தனபுர இலங்கையின் தலை நகராக இயங்கிவருகின்றது.

இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர் எனும் நால் வகை இனத்தவர்களும், இந்துக்கள் கிறீஸ்த்தவர்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர் மதத்தவர்களும் வாழுகின்றார்கள். இவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பேசுகின்றார்கள்.

1948ம் ஆண்டு பெப்பிரவரி 4ம் திகதி ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1972 மே 22ம் திகதி குடியரசு ஆனது. இலங்கை, ஐரோப்பாவில் உள்ள சுவிற்சலாந்து நாட்டைப் போல இருமடங்கு பெரியது. சனத்தொகையும் ஏறக்குறைய அவ்வாறானதே. இலங்கையின் பரப்பளவு 65600 சதுரமீற்றர் அல்லது 25332 சதுர மைல்கள் ஆகும். சனத்தொகை 10.5மில்லியன் அதாவது 15925000 ஆகும். அவுஸ்திரேலியாவின் சனத்தொகையும் ஏறக்குறைய இதே ஆகும்.

(வளரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் எண்ணம்

NEUSS-1

சிறுவர் அமுதம் ஆசிரியருக்கு,

தாங்கள் வெளியிடும் சிறுவர் சஞ்சிகையில், தொடர்ந்து கதைகள் தான் வருகின்றன. இவைகள் மட்டுந்தான், சிறுவர்களைச் சிந்திக்க வைக்கும் என்ற எண்ணமா? கதைகள் மூலம் தாய்மொழிக்குள் இருத்தி விட முடியாது ஆசிரியரே! எமது தாய் மொழியைச் சிறுவர் மூலம் மலரவைக்கும் எண்ணம் தங்களுக்கு இருப்பதையிட்டுச் சந்தோசம். தொடர்ந்து வரும் இதழ்களில் வினாவிடைப் போட்டி, நொடிகள், சிறுவர் -பாடல்கள், சிறுவர்களுக்குப் பயன்படக் கூடிய விடயங்களையும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என நம்புகிறேன்.

நீங்களே கதைகளை எழுதி வாசிப்பதற்கு விட்டு விடாமல், சிறுவர்களையும் எழுதுவதற்கு முயற்சி எடுக்கலாம் தானே? கதைகளை சேகரிக்கும் பொறுப்பைச் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுவர்களிடமும் விட்டு விட்டால் சஞ்சிகை மலர வாய்ப்புண்டு.

இப்படிக்கு
Neuss-1

என்ன! திருமதி)...... அவர்களே மொட்டையாக எழுதி விட்டீர்கள்? நல்ல விடயங்களைச் சொல்லும் போது மொட்டையாகவா சொல்ல வேண்டும்?? கதைகள் மூலம் தாய் மொழிக்குள் சிறுவர்களை இழுத்து விடமுடியாது. என்றால்? இழுக்கக் கூடிய வழி வகைகளையாவது எழுதியிருக்கலாமே? நொடிகள் தொடர்ந்து வருகின்றன. மேலும் ஆக்கங்கள் தேவைப் படுவதாகவே அடிக்கடி எழுதியுள்ளோம். கடிதம் போலவே உங்கள் ஊக்கமும் மொட்டையாக இராமல், நீங்களும் ஆக்கங்கள் எழுதியும் சேகரித்து அனுப்பி உதவலாம் தானே? உங்கள் ஆதரவு, ஆக்கங்களின் வடிவில் வரும் என அடுத்தும் எதிர்பார்க்கலாம் அல்லவா??

— ஆசிரியர் —


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் கைகளில் பத்து கற்கள் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றை ஒரு நிரையில் நான்கு கற்கள் தெரியும்படி மொத்தம் ஐந்து நிரைகளில் வைக்கவேண்டும் நிரைகள் எந்தத் திசையாகவும் அமையலாம். பொறுமையை இழந்து விடாமல் முயற்சி செய்யுங்கள்.

சென்ற இதழில் பத்துக் கற்களை மூன்று எண்ணி ஐந்து சோடி சேர்ந்த விடைகள்; இதோ -




விடுகதை

9) பெயரில் புலியுண்டு: உருவிலோ செயலிலோ புலி இல்லை! அது என்ன?

www.tamilarangam.net

# புதிர்க்கதை

ஒரு முதலாளி வேட்டைக்குப்போய்த்திரும்பினார்
வரும்போது கொக்கு ஒன்றைப்பிடித்து வந்தார்.

வீட்டு வேலைக்காரனிடம் அதைக்கொடுத்துச்
சமைக்கச் சொன்னார். வேலைக்காரன் அதைச்
சமைத்தான். கறியின் மணம்

மூக்கைத்துளைத்தது. கொஞ்சம் எடுத்துச்சாப்பிட்
டான். நல்லாய்த்தான் இருந்தது. ஆசை

விடவில்லை. இன்னும் கொஞ்சம் கொஞ்சம்

என்று கொக்கின் ஒரு காலையே வேலைக்-
காரன் சாப்பிட்டு முடித்து விட்டான்.

முதலாளி கேட்டால் சமாளித்துக் கொள்ள-
லாம், என்று எண்ணிக் கொண்டான்.

முதலாளி சாப்பிட

வந்தார். வேலைக்காரனுக்கு ஒரே யோசனை

யாகவே இருந்தது. முதலாளிக்குச் சாப்பாட்டைப்
பரிமாறினான். கொக்கின் ஒரு காலைச்

சாப்பிட்ட முதலாளி மற்றக் காலை யும்

கொண்டு வருமாறு வேலைக்காரனிடம்

சொன்னார். வேலைக்காரன் முதலாளியின்

காதருகே வந்து "என்னங்க கொக்குக்கு

ஒரு கால் தானேங்க, நீங்க ஒரு கொக்குத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தானே கொண்டு வந்தீங்க" என்றான்.
முதலாளிக்கு ஒரே சிரிப்பாவே இருந்தது.
முதலாளியுடன் வேறு ஆட்களும் சாப்பிட்டுக்
கொண்டிருந்தனர். மற்றவர்கள் முன்னிலை
யில் வேலைக்காரனை ப் பேசுவது அழகல்ல'

என்பது தெரிந்த முதலாளியும் வேலைக்
காரனின் காதில் ரகசியமாக "நாளைக்கு
ஒரு கால் கொக்கைக் காட்ட வேண்டும்
எனச் சொன்னார். சரி என்று வேலைக்
காரனும் சொன்னான்.

அடுத்தநாள்
இருவரும் வயலுக்குப்போய்க் கொண்டிருந்
தனர். [illegible]
வயல் உழுது நீர் விடப்பட்டிருந்தது.
அங்கே கொக்குகள் பல ஒற்றைக்காலில்
நின்றன. அங்கே பாருங்க முதலாளி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒற்றைக் கால் கொக்கு என வேலைக்
காரன் காட்டினான். முதலாளியும் பார்த்-
தார். அவை யெல்லாம் ஒற்றைக்காலிலே
நின்றன. திடீரென்று "சூய்" என்றார்.
கொக்குகள் தமது இரண்டு கால்களையும்
நிலத்தில் ஊன்றிப் பறந்தன. "அதோ பார்
கொக்குகளுக்கு இரண்டு கால் என்று
முதலாளி காட்டினார். *

அதற்கு வேலைக்காரன் என்ன
பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டிருப்
பான்?

யோசித்து விடையைக் கண்டுபிடியுங்கள்.
முதலில் நீங்கள் முயற்சி செய்யுங்கள்.
முடியாது விட்டால் மற்றவர்களின் உதவியை
நாடுங்கள். அதுவும் சரி வராவிட்டால்?
அடுத்த அமுதத்தில் விடை வரும். அது
வரை நீங்கள் உங்கள் மூளைக்கு வேலை
கொடுத்துக் கொண்டிருக்கலாம்


விடுகதை

10) போவான் வருவான்! ஆனால் தலைகீழாகத்
தான் நிற்பானாம்.. யார் அவன்?

www.tamilarangam.net

# திரைப்படம்

திரைப்படத்தை யார் முதலில் கண்டு பிடித்தது என்பதில்....



பல மாறுபட்ட கருத்துகள் உள்ளன. என்றாலும் 1895ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லுமிரே - லுயி சகோதரர்கள் 'புகையிரதம் ஒன்று ஓடி வரும் காட்சியைக் காண்பித்து பார்வையாளர்களை ஓடவைத்தார்கள்

1902ல் ஜோர்ஜ் மெலீஸ் என்பவர் "சந்திரனுக்குப் பயணம்" என்ற ஆங்கிலத் திரைப்படம் எடுத்தார். பின்னர்

1923ல் பேசும்படம். (முதல் பேசும்படம்)

1932ல் முதல் டெக்னிக்கலர் படம் "மிக்கிமவுஸ்"

முதலில் கலரில் தோன்றியது காட்டூன் படமே.

1953ல் சினிமாஸ்கோப் படம்

தகவல் - செல்வி தமிழினி -
- செல்வராஜா

www.tamilarangam.net

அமுதம் முதலாம், இரண்டாம் இதழ்கள்
மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளன.
தேவையானோர் உடன் தொடர்பு
கொள்ளவும். "அமுதம்" சஞ்சிகையின்
சந்தாதாரர்களுக்கு மட்டும் மூன்று
மாதங்களுக்கு ஒரு முறை வேறு
சஞ்சிகை ஒன்று இலவசமாக அனுப்
-பிவைக்கப்படவுள்ளது.


ஆக்கங்கள் சிறுவர்களி
டமிருந்து வருவதையே அமுதம் எதிர்
பார்க்கின்றது. நீங்களும் எழுதுங்கள்
என்று சிறுவர் சிறுமியரை தூண்டி ஊக்குவித்து
உற்சாகப் படுத்தி எழுதல் [illegible]
அமுதத்தினைச் சிறப்புடைய வையுங்க
ள். என்று எல்லோரையும் அமுதம்
அன்புடன் கேட்டுக் கொள்கின்றது.
இது சிறுவர் சஞ்சிகை. சிறுவர்கள்
எழுதுவதே இன்னும் சிறப்பாக
இருக்கும். இல்லையா?

ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# AMUTHAM



இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை, தென்னை, பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு

தொடர்புகளுக்கு

SINNA-RAJESWARAN
"AMUTHAM"
GLADBACHER STR-16
5013 ELSDORF (RHLD
02274.7674

KINDERFREUNDLICH MAGAZIN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்